# உங்கள் உயிலைத் தயாரித்தல்

இந்த உதவிக்குறிப்புத் தாள் **உயில்** ஒன்றைத் தயாரிக்க உங்களுக்குத் தேவையான தகவல்களைச் சேகரிக்க உதவுகிறது. உயில் என்பது நீங்கள் இறந்த பிறகு உங்கள் சொத்துக்கு என்ன நடக்கும் என்பதைச் சொல்லும் ஒரு சட்டபூர்வ ஆவணமாகும்.

நீங்கள் உயில் எழுதாமல் இறந்தால், உங்கள் சொத்துக்கு என்ன நடக்கும் என்று சட்டம் கூறுகிறது.

உங்களுக்கு ஏதாவது கேள்விகள் இருந்தால் ஒரு வழக்கறிஞரிடம் பேசுங்கள்.

இந்தக் குறிப்புத் தாள் உயில் தயாரிக்க உங்களைத் தொடக்கி வைக்கிறது. உயில்கள் பற்றிய மேலதிகத் தகவல்கள் உங்களுக்குத் தேவைப்படக்கூடும்.
உங்கள் உயிலைத் தயாரித்தல் பற்றி stepstojustice.ca/wills கூறுகின்றது.

அத்துடன் உயில் எழுதுவதற்கு வெவ்வேறு வழிமுறைகள் உள்ளன. உயில் தயாரிப்பதற்கு stepstojustice.ca/GP-wills இல் CLEOவினால் வழிகாட்டப்படும் அறிவுறுத்தலைப் பாருங்கள்.

| சொத்துக்கான ஒரு நிர்வாக அறங்காவலரைத் தேர்ந்தெடுக்கவும் | உதவிக்குறிப்புகள் |
|---|---|
| ☐ பொருத்தமான ஒரு நபரைத் தேர்ந்தெடுங்கள். அவர் உங்கள் சொத்துக்களை நிர்வகிக்கும் அறங்காவலராக (காப்பாளராக) இருக்க ஒப்புக்கொள்கிறாரா என்று கேளுங்கள்.<br><br>☐ உங்களுக்கு **ஒன்றுக்கும் மேற்பட்ட** நிர்வாக அறங்காவலர் தேவையா என நீங்கள் முடிவு செய்ய வேண்டும். நீங்கள் அப்படி முடிவெடுத்தால், அவர்கள் எப்படி முடிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்று சொல்லுங்கள்.<br><br>☐ **மாற்றீடாக** ஒரு சொத்து நிர்வாக அறங்காவலர் உங்களுக்கு வேண்டுமா என்று முடிவு செய்யுங்கள். | உங்கள் **சொத்தினை நிர்வகிக்கும் அறங்காவலர்** (காப்பாளர்) உங்கள் உயிலில் உள்ள வழிமுறைகளை நிறைவேற்றுகிறார். நீங்கள் இறக்கும் போது செய்ய வேண்டிய பிற விடயங்களுக்கும் அவர்கள் பொறுப்பாக இருக்கலாம், அதாவது உங்கள் இறுதிச் சடங்கை ஏற்பாடு செய்தல், உங்கள் கடன்கள் மற்றும் வரிகளைச் செலுத்துதல் போன்றவை.<br><br>உங்கள் சொத்தினை நிர்வகிக்கும் அறங்காவலர் பின்பற்ற வேண்டிய சில **விதிமுறைகள்** உள்ளன. உதாரணமாக, அவர்கள் சொத்தை உரியமுறையில் நிர்வகிக்கவில்லை என்றால், ஒரு பயனாளி அல்லது வேறு யாராவது அவர்களை நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லக்கூடும். இது ஒரு பாரிய பொறுப்பாகும் மற்றும் பல ஆண்டுகளுக்கு நீடிக்கக் கூடும்.<br><br>நீங்கள் நம்பக்கூடிய நம்பகமான வயதுவந்த ஒருவரைத் தேர்ந்தெடுக்கவும். அவர்கள் ஒன்ராறியோவில் வசிப்பது சிறந்தது. அவர் ஒரு நண்பராகவோ அல்லது குடும்ப உறுப்பினராகவோ இருக்கலாம். அல்லது நீங்கள் ஒரு அறக்கட்டளை நிறுவனம் அல்லது ஒரு வழக்கறிஞர் அல்லது கணக்காளர் போன்ற ஒரு நிபுணரைத் தேர்வு செய்யலாம். |

| | |
|---|---|
| ☐ உங்கள் அனைத்து நிர்வாக அறங்காவலர்களினதும் முழுமையான சட்டபூர்வப் பெயர் மற்றும் தபால் முகவரி உள்ளிட்ட சகல தொடர்புத் தகவலையும் பெற்றுக்கொள்ளுங்கள். மேலும் அவர்கள் கடந்த காலத்தில் வேறு ஏதாவது பெயர்கள் பயன்படுத்தியிருந்தால், அவற்றையும் பெற்றுக்கொள்ளுங்கள். | நீங்கள் **ஒன்றுக்கும் மேற்பட்ட** நிர்வாக அறங்காவலர்களைக் குறிப்பிட்டால், அவர்கள் அனைத்து முடிவுகளையும் ஒருமித்து எடுக்க வேண்டும். உங்கள் உயிலில் நீங்கள் இதை மாற்றலாம்.<br><br>முதலில் தேர்ந்தெடுக்கப்பட்ட உங்கள் நிர்வாக அறங்காவலர்கள் முன்வரவில்லை அல்லது அவர்களுக்கு முடியாத பட்சத்தில், ஒரு **மாற்றீட்டு** நிர்வாக அறங்காவலர் செயல்படுவார்.<br><br>உங்கள் உயிலில் வேறு ஏதாவது குறிப்பிடப்படாவிட்டால், ஒரு நிர்வாக அறங்காவலர் தங்கள் பணிக்கு "நீதியான மற்றும் நியாயமான" ஊதியத்தைப் பெறலாம் என்று சட்டம் கூறுகிறது. இது வழக்கமாக எவ்வளவு என்பதற்குச் சட்டம் ஒரு விகிதத்தை நிர்ணயித்துள்ளது. இது உங்கள் சொத்திலிருந்து செலுத்தப்படுகிறது. |

| ## உங்கள் பயனாளிகளைத் தேர்ந்தெடுத்தல் | ## உதவிக்குறிப்புகள் |
|---|---|
| ☐ உங்களுடைய **பயனாளிகளின்** பட்டியல் ஒன்றை உருவாக்குங்கள்.<br><br>☐ உங்கள் அனைத்துப் பயனாளிகளினதும் முழுமையான சட்டபூர்வப் பெயர் மற்றும் தபால் முகவரி உள்ளிட்ட சகல தொடர்புத் தகவலையும் பெற்றுக்கொள்ளுங்கள். மேலும் அவர்கள் கடந்த காலத்தில் வேறு ஏதாவது பெயர்கள் பயன்படுத்தியிருந்தால், அவற்றையும் பெற்றுக்கொள்ளுங்கள். | **பயனாளிகள்** எனப்படுவோர் நீங்கள் இறக்கும் போது சொத்துக்களைப் பெற்றுக்கொள்ளும் நபர்கள் அல்லது நிறுவனங்கள்.<br><br>உங்களால் முடிந்தால், உங்களைச் சார்ந்திருப்பவர்களுக்கு நிதி ரீதியாக உதவப் போதுமான அளவு விட்டுச் செல்லுங்கள். அல்லது அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று மேலதிகமாகக் கேட்கக்கூடும். உங்களில் **சார்ந்து வாழ்பவர்** என்பவர் நீங்கள் நிதி ரீதியாக ஆதரிக்கும் ஒருவர், அல்லது நீங்கள் இறக்கும் போது ஆதரிக்க வேண்டும் என்று சட்டம் கூறும் ஒருவர்.<br><br>**வாழ்க்கைத் துணைவர்கள்** (சட்டபூர்வமாகத் திருமணம் செய்து கொண்டவர்கள்) மற்றும் **பொது மரபுச் சட்டத் துணைவர்கள்** (சட்டப்படி கூடிவாழும் துணைவர்) வெவ்வேறு உரிமைகளைக் கொண்டுள்ளனர். உதாரணமாக, ஒருவர் உயில் எழுதாமல் இறந்துவிட்டால், அவரது வாழ்க்கைத் துணைவருக்கு அவரது சொத்தில் ஒரு பகுதியைப் பெற உரிமை உண்டு. ஒரு பொது மரபுச் சட்டத் துணைவருக்கு அது கிடையாது. ஆனால் அவர்கள் நீதிமன்றத்தில் ஒரு கோரிக்கையை முன்வைக்க முடியும். |

| தகவல்களைச் சேகரிக்கவும் | உதவிக்குறிப்புகள் |
| --- | --- |
| ☐ உங்கள் **சொத்து** மற்றும் **கடன்கள்** அனைத்தையும் பட்டியலிடுங்கள்.  நீங்கள் எவருக்கெல்லாம் எவ்வளவு கொடுக்க வேண்டும் என்று அந்தத் தொகைகளையும் சேர்க்கவும். | நீங்கள் இறக்கும் போது உங்களுக்குச் சொந்தமாக இருக்கும்  உடைமைகளும், பிற சொத்துகளும் தான் உங்கள் **சொத்து** ஆகும்.<br><br>உங்கள் **சொத்து** என்பதில் நிலவுடைமைச் சொத்து, பணம், வாகனங்கள், நகைகள், தளபாடங்கள் போன்ற தனிப்பட்ட சொத்துக்கள், வெகுமதித் திட்டங்களிலிருந்து கிட்டும் புள்ளிகள் மற்றும் உங்கள் செல்லப்பிராணிகள் ஆகியவை உள்ளடங்கும்.<br><br>உங்கள் **கடன்களில்** வருமான வரிகள், அடமானங்கள், கடன் வரிகள், கடன் அட்டைக் கொடுப்பனவுகள் மற்றும் வாகனக் கடன்கள் ஆகியவை அடங்கும். |
| ☐ யாரோ ஒருவருடன் சேர்ந்து **கூட்டுறவாக** உங்களுக்குச் சொத்து இருக்கிறதா என்று பரிசோதிக்கவும். | நீங்கள் **கூட்டுறவாகச்** சொந்தமாக வைத்திருக்கும் சொத்து வித்தியாசமாகக் கையாளப்படும், மேலும் அது உங்கள் சொத்தின் ஒரு பகுதியாக இல்லாமல் இருக்கலாம். |
| ☐ **நியமிக்கப்படும் பயனாளிகளின்** பெயர்களைப் பெற்றுக்கொள்ளுங்கள். | ஓய்வூதியம், ஆயுட் காப்புறுதிக் கொள்கை அல்லது பதிவுசெய்யப்பட்ட முதலீடு போன்ற சொத்துக்களுக்கு **நியமிக்கப்பட்ட பயனாளிகளை** நீங்கள் பெயரிட்டால், நீங்கள் இறக்கும் போது அந்தப் பணம் அவர்களுக்கு நேரடியாகச் செல்லும். இது பொதுவாக உங்கள் சொத்தின் ஒரு பகுதியாக இருக்காது. |

| உங்கள் சொத்தை என்ன செய்வது என்று முடிவு செய்யுங்கள் | உதவிக்குறிப்புகள் |
| --- | --- |
| ☐ பயனாளிகளுக்குக் **குறிப்பிட்ட கொடுப்பனவுகளைக்** கொடுப்பதா என்பதை முடிவு செய்யுங்கள். | நீங்கள் இறக்கும் போது, உங்கள் சொத்து நிர்வாக அறங்காவலர் **முதலில்** உங்கள் இறுதிச் சடங்குச் செலவுகள், கடன்கள், வரிகள் மற்றும் ஏதாவது சட்டக் கட்டணங்களைச் செலுத்துவார். பயனாளிகள் அதன் பிறகு **மட்டுமே** ஏதாவது பெற்றுக்கொள்வார்கள்.<br><br>அடுத்துப், பயனாளிகளுக்குச் செல்ல வேண்டும் என்று நீங்கள் கூறியிருக்கும் எந்தவொரு **குறிப்பிட்ட கொடுப்பனவுகளையும்** அவர்கள் வழங்குகிறார்கள். உதாரணமாக, இது ஒரு தொகைப் பணமாகவோ அல்லது ஒரு குறிப்பிட்ட சொத்தாகவோ இருக்கலாம். |
| ☐ உங்கள் சொத்தின் **மீதம்** யாருக்குக் கிடைக்க வேண்டும் என்பதை முடிவு செய்யுங்கள். | அவர்கள் செய்யும் கடைசி விடயம் என்னவென்றால, உங்கள் உயிலின்படி நீங்கள் பெயரிடும் நபருக்கு **மீதியாயிருப்பதைக்** கொடுப்பதுதான். மேலே உள்ள அனைத்தும் முடிந்த பிறகு எஞ்சியிருப்பது தான் மீதி. |
| ☐ ஒரு பயனாளி உங்களுக்கு முன்னர் **இறந்தால்** என்ன நடக்கும் என்பதைத் தீர்மானியுங்கள். | |
| ☐ பயனாளிகள் தங்கள் சொத்தை எவ்வாறு பெறுகிறார்கள் என்பதற்கான ஏதாவது **அறக்கட்டளைகள்** மற்றும் **விதிகளை** அமைக்க விரும்புகிறீர்களா என்பதைத் தீர்மானியுங்கள். | உங்கள் பயனாளிகள் தங்கள் சொத்தை எவ்வாறு பெறுகிறார்கள் என்பது குறித்த விதிகளைக் கொண்ட **அறக்கட்டளைகளை** நீங்கள் உருவாக்கலாம்.<br><br>ஒரு அறக்கட்டளை, **அறங்காவலர்** என்று அழைக்கப்படும் ஒருவரை மற்றொரு நபருக்கான சொத்தை நிர்வகிக்க அனுமதிக்கிறது. அந்த நபருக்கு நன்மை பயக்கும் வகையில் அறங்காவலர் இதைச் செய்ய வேண்டும்.<br><br>உதாரணமாக, ஒரு இளைஞருக்கு, அவரின் சொத்தை நிர்வகிக்க ஒரு அறங்காவலரை நீங்கள் தேர்ந்தெடுத்து, மற்றும் அந்த இளைஞர் சொத்தைப் பெறுவதற்கான வயதை நிர்ணயிக்கலாம். |

| உங்கள் பிள்ளைகளுக்காகத் திட்டமிடுங்கள் | உதவிக்குறிப்புகள் |
|---|---|
| ☐ உங்கள் இறப்புக்குப் பின்னர், உங்கள் பிள்ளைகளைப் பற்றி முடிவெடுக்க ஒருவரைத் தேர்ந்தெடுங்கள். அவர் இதைச் செய்வாரா என்று கேட்டறியுங்கள்.<br><br>☐ உங்கள் இறப்புக்குப் பின்னர், உங்கள் பிள்ளைகளின் சொத்துக்களை நிர்வகிக்கும்படியாக ஒருவரைத் தேர்ந்தெடுங்கள். அவர் இதைச் செய்வாரா என்று கேட்டறியுங்கள்.<br><br>☐ ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட **மாற்று நபர்கள்** உங்களுக்கு வேண்டுமா என்று தீர்மானியுங்கள்.<br><br>☐ உங்கள் பிள்ளைகளுக்கு உதவுவதற்காக நீங்கள் பெயர் குறிப்பிடும் எவரினதும் முழுமையான சட்டபூர்வப் பெயர் மற்றும் தபால் முகவரி உள்ளிட்ட சகல தொடர்புத் தகவல்களையும் பெற்றுக்கொள்ளுங்கள்.<br><br>☐ 18 வயதுக்குட்பட்ட அல்லது மாற்றுத்திறனாளிப் பிள்ளைகளுக்குத் திட்டமிட ஒரு வழக்கறிஞரிடம் பேசுங்கள். | உங்கள் பிள்ளைகளுக்கான முடிவெடுக்கும் பொறுப்பு பொதுவாக மற்றொரு பெற்றோருக்கு இருக்கும்.<br><br>ஆனால் இந்தப் பொறுப்பில் யாரும் இல்லாமல் இருக்கக்கூடும். அல்லது இருந்தால், நீங்கள் இறக்கும் போது அவை கிடைக்காமல் போகலாம். உதாரணமாக, அவர்கள் உங்களுக்கு முன் அல்லது அதே நேரத்தில் இறந்திருக்கலாம்.<br><br>இது நடந்தால், நீங்கள் இறந்த பிறகு 90 நாட்களுக்கு உங்கள் பிள்ளைகளைக் கவனித்துக் கொள்ள யாரையாவது உங்கள் உயிலில் குறிப்பிடலாம். அவர்கள் தொடர விரும்பினால் குடும்ப நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டும்.<br><br>நீங்கள் இறந்த பிறகு 90 நாட்களுக்கு உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் விட்டுச் செல்லும் சொத்துக்களைக் கவனித்துக் கொள்வதற்கும் கூட யாரையாவது உங்கள் உயிலில் குறிப்பிடலாம். அவர்கள் அதனைத் தொடர விரும்பினால் நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டும்.<br><br>முக்கிய நபர் முன்வராவிட்டால் அல்லது செயல்பட முடியாவிட்டால், செயல்படக்கூடிய ஒரு **மாற்றீட்டு** நபரை நீங்கள் குறிப்பிடலாம்.<br><br>உங்களிடம் **மாற்றுத்திறன் கொண்ட பிள்ளை இருந்தால்**, உங்கள் பிள்ளையின் சொத்தை நிர்வகிக்க ஒரு அறங்காவலரை நியமிப்பது பற்றி ஒரு வழக்கறிஞரிடம் பேசுங்கள். உங்கள் பிள்ளை நன்கு பராமரிக்கப்படுவதற்கும், இயலாமைக்குரிய சலுகைகளைத் தொடர்ந்து பெறுவதற்கும் இதை நீங்கள் ஏற்பாடு செய்யலாம்.. |

இது கனடாவின் ஒன்ராறியோவில் உள்ள மக்களுக்கான பொதுவான தகவலாகும். இது சட்ட ஆலோசனை அல்ல.

Preparing your will - Tamil

**மதிப்பாய்வு செய்யப்பட்டது:** பெப்ரவரி 2024